## பெருந்தோட்ட நம்பக்கைப் பொறுப்பு நிதியத்தின் - 2013

பெருந்தோட்ட நம்பக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கணக்கு மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் ஏனைய விளக்கத்த தகவல்கள் என்பவற்றினை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை அரசாங்கத்தின் திறைசேரி செயலாளரிற்கும் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் நம்பிக்கையாளர்களிற்கும் இடையில் கைசாத்திட்ட 2001 ஒக்தோபர் 01 ஆந் திகதிய 1142 ஆம் இலக்க உறுதியின் 13.4 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்திற்கான பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு த்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை பொறுப்பாக உள்ளது

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க பிரதான கணக்காய்வு நிறுவனத்தின் சர்வதேச சர்வதேச நியமங்களுக்கு (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுக் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பெருந்தோட்ட நம்பக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டின் அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பவற்றினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்துகின்றதென்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2007 முதல் 2013 வரை ஆண்டுரீதியாக உமைக்கப்பட்ட வட்டி மீதான வருமான வரி கணிப்பிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 153,575,046 தொகை செலுத்த வேண்டிய வருமான வரியாக கணக்குகளில் காட்டப்பட்ட போதிலும் 2007 இலிருந்து உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அதனை அனுப்புவதற்கு படிமுறைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டு இறுதியில் மீள்கொள்வனவு உடன்படிக்கையின் ரூபா 1,008,396,991 தொகையான நிதிகள் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் நிதியம் 2011 ஆண்டிலிருந்து செயற்பட்டிருக்காத போதிலும் மீளாய்வாண்டில் காவல் கட்டணமாகவும் முகாமைத்துவ கட்டணமாகவும் முறையே ரூபா 4,056,246 மற்றும் ரூபா 1,018,999 ஆன தொகைகள் செலுத்தப்பட்டிருந்தது என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டின் போது நிதியத்தின் செயற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 10,465,998 ஆன நேரொத்த வரிக்கு முந்திய இலாபத்துடன் ஒப்பிடும் போது ரூபா 115,980,050 ஆன வரிக்கு முந்திய இலாபத்தில் விளைவித்திருந்தமையால், நிதிசார் விளைவுகளில் ரூபா 6,514,052 ஆன முன்னேற்றத்தைக் காட்டுகின்றது. ரூபா 18,374,580 ஆல் மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் மீதான வட்டி வருமானத்தின் அதிகரிப்பு இந்த முன்னேற்றத்திற்கு பிரதானமாக இருந்தது.

## 4. கணக்களிப்பும் நல்லாளுகையும்

நிதி அமைச்சின் அரச நிதித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் பணிப்பாளர் 2010 திசெம்பர் 23 இல் நடைபெற்ற கூட்டத்தில் நிதியத்தை மூடுவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம் காரணமாக நம்பிக்கை பொறுப்பாளர் சபையின் சார்பில் இரண்டு உறுப்பினர்கள் நிதிக்கூற்றுக்களில் கையொப்பமிட்டிருந்தனர். எவ்வாறாயினும், 2014 ஆண்டு இறுதி வரை 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பிஎவ்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.3 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்கொழிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

நிதியத்தின் பணிப்பளர் நாயகம் பெருந்தோட்ட நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் கணக்கொழிப்பு நடைமுறையை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததென குறிப்பிட்டிருந்தார்.